**MUTHTHARASI - Art Literary Culture Tamil Journal, Madurai.**

**முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்,மதுரை.**

VOLUME – III ISSUE - II

FEB – 2026 E-ISSN : 2584 – 1238

# "அவளுக்கு வெயில் என்று பெயர்" - கவிதை பன்முகப் பார்வை

**முனைவர் ரா.விஷ்ணு பிரியா**

**உதவிப் பேராசிரியர்,தமிழ்த்துறை**

**அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி(தன்னாட்சி),சிவகாசி.**

**9677514050 - vishnupriya1605@gmail.com**

DOI 10.5281/zenodo.18518149.

Abstract :

Thamizhachi Thangapandian's poetry possesses the power to explore and create works that encompass tradition, modernity, concern for the marginalized, and the multifaceted identities of the Tamil language. This research paper will examine how her poem, "She is Named Sunlight," expresses a multitude of themes, including a woman's emotions, love, pain, the influence of Sangam literature and epics, tradition, society, and the regional landscape based on folk goddesses.

KeyWords : Thamizhachi Thangapandian – Poetry – Emotions – Tradition - Love

கவிதை என்பது ஒரு கலையாகும் .கவிஞர் தான் பெறும் அனுபவங்களைக் கற்பனை நயத்துடனும், கருத்து செறிவுடனும் , உணர்ச்சி, எளிமை ஆகியவற்றைக் கலந்து கவிதை வடிவங்களாகத் தருகின்றனர்.

உள்ளத் துள்ளது கவிதை - இன்பம்
உருவெடுப்பது கவிதை
தெள்ளத் தெளிந்த தமிழில் - உண்மை
தெரிந்து ரைப்பது கவிதை" (மலரும் மாலையும்)

என்று கவிமணியின் கருத்திற்கேற்ப தமிழச்சி தங்கபாண்டியனின் கவிதை தொன்மையும் , நவீனமும்,அடித்தட்டு மக்களின் மீதான அக்கறை , தமிழின் பன்முக அடையாளங்கள் போன்றவற்றை தேடிப் படைக்கும் ஆற்றலுடையது . "அவளுக்கு வெயில் என்று பெயர் " என்ற கவிதையில் பெண்ணின் உணர்வுகள், காதல், வலி, சங்க இலக்கிய தாக்கம், காப்பிய தாக்கம், தொன்மை, சமூகம், நாட்டார் பெண் தெய்வங்கள் அ டிப்படையில் நில சூழலும் எனப் பன்முக தளங்களில் கூறியுள்ளதை இவ்வாய்வு கட்டுரை வழி காண்போம்.

**காப்பிய தாக்கம்**

பழந்தமிழ்க் காப்பியங்களின் கதைமாந்தர்கள் , அறக்கருத்துக்கள்,உத்திகள் மற்றும் யாப்பு வடிவங்களை நவீன கவிதைகளில் கையாளுவதைக் குறிப்பது காப்பிய தாக்கம் ஆ கும். தமிழச்சி தங்கப் பாண்டியன் தன் கவிதையில் விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுபிரபாகரனின் மகன் சுட்டுக் கொல்லப்பட்ட செய்தியை பொறுக்காத கவிஞர் அந்த அநீதிக்கு எதிராக சிலப்பதிகார கண்ணகியாக உருமாறுவேன் என்று கூறுவதை

"ரெண்டு மக்க பெத்தெடுத்த
என்நெறஞ்ச வயிறெரிஞ்சு
பால் சொரந்து ஓய்ஞ்ச இப்
பாவிமக முலை
ஒன்னத் திருவி எறிவேன்
நின்னு கொல்லட்டும் அது
நீதியின் வெஞ்சினமாய்"



http://Creativecommons.org//license/by/4.0/.

VOLUME – III ISSUE - II
FEB – 2026 E-ISSN : 2584 – 1238

இக்கவிதை வழி அறிய முடிகிறது . சிலம்பில் “ஒரு முலையை திருகி எறிந்து மதுரையை தீக்கிரையாக்கினாள் கண்ணகி அதுபோல தன் மார்புகளில் ஒன்றைத் திருகி எறிந்து நீதியை நிலைநாட்டுவேன் என்பதை

”அறுத்த ஒரு முலையிருப்பதாய்
அலறினாள் எல்லைக் காளி” (அ.வெ.எ. பக்)

நாட்டில் பெண்களுக்கு எதிராக நடைபெறும் பல வன்கொடு மைகளுக்கு நீதி பகர வேண்டும் என்ற நோக்கில் இக்கவிதையில் கூறியுள்ளார்.

**இயற்கை**

மனிதன் தோன்றிய காலம் முதல் இன்று வரை அவனோடு நெருங்கிய உறவு கொண்டிருப்பது இயற்கையாகும் . அறிவியல் வளர்ச்சியில் மனிதன் பேரண்டங்களை எல்லாம் அளந்து வாழ்ந்தாலும் கூட இயற்கையின் அழகிலிருந்து மனிதனைப் பிரித்து எடுக்க இயலாது . பஞ்ச பூதங்களின் தொகுப்பு இயற்கையை உருவா க்குகிறது. நிலம், நெருப்பு, நீர், காற்று, ஆகாயம் ஆகிய ஐந்தும் கலந்த மயக்கம் உலகம் ஆகும்.

**”நிலம், தீ, நீர், வளி விசும்போடைந்தும்**
**கலந்த மயக்கம் உலகம்”(தொல்.மரபியல் நூற்**.91)

என்று தொல்காப்பியர் கூறியுள்ளார் . அப்படிப்பட்ட இயற்கையை தமிழச்சி தன் கவிதையில் மழையை ஆர்ப்பாரிப்பை அழகுற எடுத்துரைப்பதோடு

” மழையின் முணுமுணுப்புடன்
வந்த உன் முதல் அழைப்பு -
பால் குடி மறவாமல்
என்னோடு
தங்கிச் சுற்றும் தட்டான்! (அவ.வெ.எ.129)

மழை காதலர்களை மட்டுமல்ல வண்ணத்துப்பூச்சியையும் மயங்க வைக்கிறது . மோகத்தின் அல்லிப்பூவாய், முன் நெற்றி முத்தமாய் இருப்பதை அழகு உணர்ச்சியோடு கவிஞர் வெளிப்படுத்தியுள்ளார்.

”காதலைக் கண்சிமிட்டிக்
கையில் தருகின்றது மழை
ஆசையின் விரலிடுக்கில்
கிளைவிடுகின்றது
மோகத்தின் அல்லிப்பூ” (அவ.வெ.எ.133)

இவ்வாறு இயற்கையை ஆராதிக்கும் வர்ணணை மட்டுமல்லாமல் மௌனம் தான் மழையின் சைகை, சவலைப்பிள்ளை மழை என்றெல்லாம் வர்ணிக்கிறார் கவிஞர்.

**நவீன உலகம்**

இன்றைய உலகம் அறிவியல் வளர்ச்சியிலும் , அதிக நவீனத்துவத்தாலும் பல்வேறு மாற்றங்களை அடைந்து வருகிறது. உலக மாறுதல்கேற்ப பழமைகளும் நவீனத்துடன் மாறியுள்ளதை கவிஞர்,

”அதிகாலை வரை
online உரையாடலில் இருந்தவளை


http://Creativecommons.org//license/by/4.0/.

VOLUME – III ISSUE - II
FEB – 2026 E-ISSN : 2584 – 1238

அவசரமாய் Shower குளியல் முடித்து
அலுவலகம் கிளம்புமாறு
அறிவுறுத்தியது அலாரம் -
மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளை
குறுஞ்செய்திகளில் எழுப்புகிறார்கள் தோழிகள்!"(அவ.வெ.எ.35)

நவீனப் பெண்களின் உலகம் , மின்னணு பொருட்கள் ஆக்கிரமித்தாலும் அவளின் அடையாளம் இன்னும் மாறவில்லை என்பதை ஆண்டாளின் மார்கழி கவிதை தாக்கத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

**சமூக அவலம்**

சமூகத்தில் பெண்களின் நிலை வரலாற்று ரீதியாக பல ஏற்ற இறக்கங்களைக் கண்டு , தற்போது முன்னேற்றப் பாதையில் இருந்தாலும் பாதுகாப்பு சவால்கள் நிறைந்தாக காணப்படுகின்றது . பெண்கள் பொது வெளியில் சமத்துவமற்ற சூழலையும் சந்திக்கின்றனர் . கிராமப்புறங்களில் பெண்கள் கொடூரமாக கொலை செய்யப்பட்டு பின் சிறுதெய்வமாக வழிப்பட்டாலும் இன்னும் சமூகத்தில் பல வன்முறைகள் பெண்களுக்கெதிராக நடைப்பெற்று கொண்டிருப்பதை

"அந்தரங்க நிணம் முகர்ந்து
ஒப்பு வைக்க ஆரம்பித்தாள் சீலைகாரியம்மா
புகையின் கோடுகளில்
முட்புதர் கிழிபட்ட சங்கீதாவின்
பள்ளிச் சீருடை அரைக்கம்பத்தில் பறப்பதாய்
பிலாக்கணம் வைத்தாள் பிடாரி" (அவ.வெ.எ.பக்.25)

சூல் ரத்தம் கவிதையில் பெண்கள் சமூகத்தில் எதிர்கொள்ளும் அவலம் குருதி கசிய பதிவாகியுள்ளது. சங்கீதா, நிர்பயா என்ற மாணவிகள் பாலியல் வன்கொடுமையால் கொடூரமாக கொலை செய்யப்பட்ட நிகழ்வுகள், முகத்தில் அமிலம் வீசப்பட்ட விநோதினி போன்ற நிகழ்வுகளால் சமூகம் சிதைந்து வருவதை இக்கவிதை வழி அறிய முடிகிறது . பெண்கள் தெய்வ வழிபட்டாலும் அவர்களுக்கெதிராக சமூகத்தில் நடக்கும் வன்கொடுமைகளை கண்டு அந்த பிடாரி தெய்வமே ஒப்பாரி வைக்கும் நிலைமை தான் இன்றைய சமூகமாகும்.

**தொகுப்புரை**

கவிஞர் தமிழச்சியின் கவிதைகள் வாழ்க்கையிலும் ,நம்மைச் சுற்றிய சமூகத்திலும் காணப்படும் சமூக விழுமியங்களை வெளிப்படுத்துகிறது.இயற்கையின் அழகுணர்வையும் மழையின் அழகுணர்வையும் தன் அழகிய சொல்லாடலால் கவிதை வழி வெளிப்படுத்தியுள்ளார். சமூகத்தின் மீதுள்ள தன் மன ஆதங்கத்தை , பெண்களுக்கெதிரான சமூக சிக்கல்கள் , வன்முறைகள் போன்றவற்றை உக்கிரமான மொழிகளோடு கவிதையாக்கியுள்ளதை இவ்வாய்வு கட்டுரை வழி அறிய முடிகின்றது.

**துணை நூற்பட்டியல்**

1. கவிமணி சி.தேசிய விநாயகம் பிள்ளை, மலரும் மாலையும்,சாரதா பதிப்பகம்,சென்னை.
2. இளம்பூரணர்(உரை),தொல்காப்பியம் (பொருளதிகாரம்), தமிழ்ப் பல்கலைக்கழகம் தஞ்சாவூர்.
3. தமிழச்சி தங்கபாண்டியன்,அவளுக்கு வெயில் என்று பெயர், உயிர்மை பதிப்பகம், சென்னை.


http://Creativecommons.org//license/by/4.0/.